᭗# தகவல் பாலம்

## தூய ஆரோக்கிய அன்னைப் பங்கு

# OUR LADY OF GOOD HEALTH PARISH

Volume 1, Issue 14 December 2021

## PASTORAL STAFF:

**Fr. Charles W. Collins**
*Pastor*

**Fr. Guymar F. Canisius Raj**
*Associate Pastor*

**Fr. Peter Gitendran**
*Residence*

**Maureen Rajadurai**
*Parish Secretary*

## MASS SCHEDULE:

| | |
|---|---|
| **Sunday:** | **12:30 pm & 4:30 pm** |
| **Tuesdays:** | **7:00 pm** |
| **First Fridays:** | **7:00 pm** |

## ONLINE STREAMING SITES:

**https://www.olghtamilparish.com/**
**https://www.facebook.com/OLGHTamilParish**
**https://www.youtube.com/olghtamilparish**

## OUR LADY OF GOOD HEALTH PARISH

**131 Birchmount Road,**
**Scarborough, ON M1N 3J7**
***(Birchmount & Danforth Ave.)***

| | |
|---|---|
| **Phone:** | **416-264-OLGH (6544)** |
| **Fax:** | **416-264-6545** |
| **Email:** | **office@olghtamilparish.com** |
| **Website:** | **www.olghtamilparish.com** |

### புதுவருட பெருவிழா திருப்பலி

மார்கழி 31, இரவு 7:00 மணிக்கும் நள்ளிரவு 11:00 மணிக்கும் திருப்பலிகள் நடைபெறும். இவ்விரண்டு திருப்பலிகளுக்கும் முன்பதிவு செய்தல் அவசியம். தை 1, காலை 8:30 மணிக்கும் (பொது), மதியம் 12:30 மணிக்கும் திருப்பலிகள் நடைபெறும்.




### விசேட திருப்பலிகள் - நேரலையாக ஒளிபரப்பு செய்யப்படும்

**மார்கழி 26** - மதியம் 12:30. மாலை 4:30 திருக்குடும்பத் திருவிழா மற்றும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான திருப்பலி

**மார்கழி 27 தொடக்கம் 30** வரை மாலை 7:00 மணிக்கு ஆலயத்தில் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

**கிறிஸ்துவின் பிறப்பில் மகிழ்ந்திருக்கும் நாம், நம்மால் இயன்ற உதவிகளை மற்றவர்களுக்கு செய்து நமது மகிழ்ச்சியை பிறருடன் பகிர்ந்துகொள்வதே கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடுவதின் உண்மையான பொருளாகும். எல்லோருக்கும் மகிழ்ச்சியான கிறிஸ்து பிறப்பு பெருவிழா மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துகள்.**

## எமது பங்குத்தந்தையின் உள்ளத்திலிருந்து



என் அன்பான தூய ஆரோக்கிய அன்னை பங்கு மக்களே,

உங்கள் அனைவரையும் செபத்தோடு கூடிய வாழ்த்துக்களும் ஆசிகளும் கூறி, இந்த அன்பு மடல் மூலம் தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சியும் உவகையும் அடைகின்றேன்.

அன்பு என்ற ஒளி உலகிற்கு வந்துவிட்டது. எமது வாழ்வியல் ஓட்டத்தை இடைநிறுத்தி அவ்வொளியைக் காண்பதற்கும் அதன் அரவணைப்பை உணர்ந்து கொள்வதற்கும் அதன் வருகைக்கான காரணத்தைக் கொண்டாடுவதற்குமான நேரம் இது.

இயேசு தந்தையின் விருப்பபடி முப்பது ஆண்டுகளின் பின்னர் சிலுவையில் தொங்கி எம்மை பாவத்திலிருந்து மீட்க ஏழ்மையின் உருவில் தொழுவத்தில் பிறந்தார்.

Whatever the circumstances of your life right now, grief or joy, struggle or success, faith or doubt, Jesus has lived it himself, and he longs to live it with you. The pandemic time and COVID variances have been putting additional struggle and grief in our daily lives. Choose life with Jesus! Let Him be born again in your heart. Allow Him to enter into your moments and give you the life for which you were created.

தொற்றுநோய் பரவலும் கோவிட் மாறுபாடுகளும் நமது அன்றாட வாழ்வில் கூடுதல் போராட்டத்தையும் துயரத்தையும் ஏற்படுத்தி வருகின்றன. இயேசுவோடு வாழ்வதற்கு அதிக நேரத்தை ஒதுக்குவோம். அத்தனை துன்பங்களும் நீங்கி, ஆரோக்கியமான வாழ்வும், புதிய ஆசீர்வாதங்களும் உங்கள் வீடுகளிலும் குடும்பங்களிலும் நிலைத்திட பிறக்கும் பாலக இயேசுவிடம் விசேடமாக வேண்டுவோம்.

எனது அன்பான பங்கு மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான கிறிஸ்மஸ் மற்றும் அமைதியான புத்தாண்டு நல்வாழ்த்துகள். குழந்தை இயேசுவின் அன்பும் மகிழ்ச்சியும் அமைதியும் உங்கள் இதயங்களிலும் உங்கள் வீடுகளிலும் நிறைவாகத் தங்கட்டும்.

**சாள்ஸ் கொலின்ஸ்**
*பங்குத்தந்தை*
*தூய ஆரோக்கிய அன்னைத் தமிழ்ப் பங்கு*




**கூட்டொருங்கியக்க திருஅவைக்கான 16வது ஆயர்கள் மாமன்றம் தொடர்பான மேலதிக விபரங்கள் இம்மாத கனகத்தூதன் வெளியீட்டல் காணலாம்.**

### நன்றியோடு நினைக்கின்றோம்

எமது பங்கின் வளர்ச்சிக்காக பல வழிகளிலும் உதவிய, தொடர்ந்தும் உழைக்கின்ற எங்கள் பங்குமக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம். உங்கள் நேரத்தையும், திறமையையும், அன்பளிப்புகளையும் இறைவனுக்குக் கொடுப்பது, பன்மடங்காக பலனைத் தரும் என்பதை மறக்காதீர்கள். வழிபாட்டு ஆண்டு முழுவதும், திட்டமிடல், ஒருங்கிணைத்தல், நேரடி ஒளிபரப்பு, சுத்தப்படுத்துதல் மற்றும் எங்கள் ஆலயத்தை அலங்கரித்தல் உட்பட பல்வேறு வகையிலும் எமக்கு உதவிய அனைவருக்கும் நன்றி.

மேலும் நமது பங்கின் பல்வேறு செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் அனைத்து உறுப்பினர்களுக்கும், குறிப்பாக திரைக்குப் பின்னால் அமைதியாகப் பணிபுரியும் அனைவருக்கும் சிறப்பான நன்றி.

தற்போதைய சவாலான காலப்பகுதியிலும், தொடர்ந்து எமது பங்கின் வளர்ச்சிக்காக நீங்கள் வழங்கி வருகின்ற நிதிப் பங்களிப்பிற்கு எமது மனம்நிறைந்த நன்றியும் இறை ஆசீரும் உரித்தாகட்டும். மலரும் ஆண்டிலும் உங்கள் ஒவ்வொருவரின் பூரண ஒத்துழைப்பை அன்போடு எதிர்பார்த்து நிற்கிறோம். உங்களையும் உங்கள் குடும்பத்தையும் தூய ஆரோக்கிய அன்னை ஆசீர்வதித்து வழிநடத்த தினமும் நாம் வேண்டுகின்றோம்.